05.11.2024

O.S.No.365/2014

**பி**.வா.சா.1.திரு. முத்தன் த.பெ.கருப்பணன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை

1. எனது உடன்பிறந்தவர்கள் உலகன், சின்னையா, முத்தன் ஆகிய நான், பொன்னையா மற்றும் முத்துகனி ஆகியோர்கள் ஆவார்கள். முத்துகனி என்ற சகோதரி இருப்பதை எனது நிருபண வாக்குமூலத்திலோ, எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவரவரர்கள் அனுபவித்து வந்த இடத்தில் 2ம் பிரதிவாதியின் இடத்தினை வாதி பொன்னையா பட்டா போட்டுக்கொண்டார், ஆகையால் இந்த வழக்கு தாக்கல் செய்தோம். 2ம் பிரதிவாதி தந்தையின் பெயர் உலகன் என்றால் சரிதான். உலகன், பொன்னையாவிற்கு பட்டா கொடுப்பதற்கு ஆட்சேபணை இல்லை என கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. உலகன், வாதி பெயருக்கு பட்டா மாற்றம் செய்வதற்கு ஆட்சேபணை இல்லை என மனு எழுதிக் கொடுத்துள்ளார் என்றாலும், இந்த வழக்கிற்காக நான் அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும சரியல்ல, நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை அளந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை அளவீடு செய்து அதில் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

2. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் முதலில் உலகன் பெயரில் இருந்தது, தற்போது 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. தாவா சொத்திற்கு தற்போது பட்டா பொன்னையா பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தில் உள்ள கட்டிடத்தினை இடித்து அந்த பகுதியை வாதியிடம் ஒப்படைக்க வேண்டும் என இந்த வழககினை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், அவர் பொய்யாக தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து பொன்னையாவிற்கு பாத்தியப்பட்டு, பொன்னையாவின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் வாதி பொன்னையாதான் குடியிருந்து வருகிறார். தாவா சொத்து பொன்னையா அனுபவத்தில் உள்ளது என்றால் அவர் ஆக்கிரமித்து உள்ளார். வாதி பொன்னையா தாவா சொத்தினை ஆக்கிரமித்து உள்ளதாக எனது எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. 2ம் பிரதிவாதி பாரிதாசன் எனது மகன், அவரை நான் உலகனுக்கு தத்து கொடுத்து விட்டேன். உலகனுக்கு, மணிமாறன் என்ற மகன் உண்டு என்றால் சரியல்ல. உலகனுக்கு மணிமாறன் என்ற மகன் உண்டு என்றாலும் இந்த வழககிற்காக நான் இல்லை என பொய்யாக சாட்சியம்

அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. உலகன், பாரிதாசனை தத்து எடுத்ததாக சொல்வதால் அதற்கான ஆதாரம் எதுவும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்பக்கம் காலனிக்கு செல்லும் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த ரோடு என் வீட்டு அருகே வரும் போது அது என் வீட்டிற்கு கிழக்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, வடக்கு பக்கம் உள்ளது. அந்தரோட்டு வழியாக எங்கள் வீட்டிற்கு வரலாம் என்றால் சரிதான், மற்றொரு பாதையும் எங்கள் வீட்டிற்கு உள்ளது. அந்த பாதை என் வீட்டிற்கு மேற்கு பக்கம் அமைந்துள்ளது. அந்த பாதை என் வீடு வரை வராது என்றாலும், பொன்னையா வீடு வரை நின்று விடும் என்றாலும் சரியல்ல. அந்த பாதையில் பொன்னையா வீடு வரை பேவர் பிளாக் கல் பதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. நான், பொன்னையா மனைவியை அடித்து ரத்தகாயம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல, அது சம்பந்தமாக எனக்கெதிராக குற்ற வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொன்னையாவும், அவரது மனைவி மட்டும் தான் அவர்கள் வீட்டில் உள்ளார்கள் என்றால் முதலில் அனைவரும் இருந்தார்கள், தற்போது அவரது மகனும், மருமகளும் தனியாக சென்று விட்டார்கள். பொன்னையா தனியாக இருப்பதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு அடிக்கடி நான், வாதி பொன்னையாவை மிரட்டி வருகிறேன் என்றால் சரியல்ல. பொன்னையா குடியிருக்கும் வீட்டில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல, பாரிதாசனுக்கு உரிமை உள்ளது. எதன் அடிப்படையில் பாரிதாசனுக்கு உரிமை உள்ளது என்று சொல்கிறேன் என்றால் அவர் உலகனின் சுவீகார மகன் என்பதால் அவருக்கு உரிமை உள்ளது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**Sd./P.Maharajan**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேலூர்.**